# பெண் நிகழ்த்துகைக் கலைஞர்களின் அந்தஸ்துநிலை வேறுபாடும் கலை வெளிப்பாட்டு முறையும் - சங்க இலக்கியங்களை மையப்படுத்திய ஆய்வு

வானதி பகீரதன்
சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

நிகழ்த்துகைசார் கலைகள் என்பது நடனம், கூத்து, நாடகம், இசை, வாய்ப்பாட்டு ஆகிய ஆற்றுகை முறைக்குட்பட்ட கலைகளைக் குறிக்கும். இக்கலைகளை நிகழ்த்தும் ஆற்றுகையாளர்களான நிகழ்த்துகைக் கலைஞர்களுக்கும் பார்வையாளனுக்குமிடையில் உணர்வுபுர்வமான நேரடித் தொடர்பு காணப்படும். சங்ககால பெண் நிகழ்த்துகைக் கலைஞர்களாக பாடினி, விறலி, அகவன்மகள், ஆடன் மகள், கிணைமகள், கூத்தியர் பாணிச்சி, பாட்டியர், மதங்கி போன்றோர் கொள்ளப்படுகின்றனர். பெண்பாற் புலவர்களும் பெண் நிகழ்த்துகைக் கலைஞர்களாகவே கொள்ளப்படுகின்றனர். வாத்தியமிசைத்து பாடல் பாடி ஆடுபவர்களாக விறலியர்களும் வாத்திய இசை இல்லாது பாடுபவர்களாக பெண்பாற் புலவர்களும் கொள்ளப்படுகின்றனர். எனவே பெண் நிகழ்த்துகைக் கலைஞர்களுள் பாடினி விறலியர், பெண்பாற் புலவர்கள் போன்றோர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

நிகழ்த்துகைக் கலைஞர்களிடையே அவர்கள்து தொழில், சாதி, பால், குலமுறை அடிப்படையில் சமூக-அந்தஸ்து நிலை வேறுபாடுகள் காணப்படுவதைக் காணலாம். இவ் வேறுபாடுகள் பெண் நிகழ்த்துகைக் கலைஞர்களின் கலைகளிலும் கலை வெளிப்பாட்டு முறைகளிலும் தொனிப்பதைக் காணலாம். பாடினிக்கும் விறலிக்கும் இடையில் அந்தஸ்து வேறுபா காணப்படுகிறது. இவ் அந்தஸ்து நிலை வேறுபாடு எவ்வாறு காணப்பட்டது? என்பது முக்கிய பிரச்சினையாகும். பெண்பாற் புலவர்களில் அரசர், வணிகர், பாணர், சாதாரண அடிநிலை மட்டப் பெண்கள் என வகைப்படுத்தி நோக்க முடியும். இப் புலவர்களிடையே காணப்பட்ட அந்தஸ்து நிலை வேறுபாடுகள் அவர்களது பாடல்களின் வெளிப்பாட்டு முறைகளில் தொனிப்பதைக் காணலாம். உயர்குலப் பெண்பாற் புலவர்களின் பாடல்களிற் காணப்பட்ட அதிகாரத்தொனி, சாதாரண அடிமட்டப் பெண்பாற் புலவர்களின் பாடல்களிலும் காணப்படுகிறதா என்பதும் பாடினிக்கும் விறலிக்கும் புலவர்களுக்குமிடையில் அந்தஸ்து நிலை வேறுபா காணப்படுகிறதா? என்பதும் அவை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன? என்பதையும் ஆராய்வதாக இவ் ஆய்வு அமைந்திருக்கும். இவ்வாய்வு இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வாகவே அமையும். மூல நூல்களான சங்க இலக்கியங்களில் இருந்தும் மேலதிக வாசிப்புக்கான நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகளில் இருந்தும் பெறப்பட்ட தகவல்கள், கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டும் ஆய்வுப்பிரச்சினையைத் தெளிவு படுத்த முனைகிறது. பகுப்பாய்வு முறை பின்பற்றப்படுவதோடு பெண்ணிலைவாத அணுகுமுறையும் சமூகவியல் ரீதியிலான அணுகுமுறையும் பின்பற்றப்படுகின்றது.

திறவுச்சொற்கள் : பெண் நிகழ்த்துகைக் கலைஞர்கள், கலை வெளிப்பாட்டு முறை